தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை 6.
ந.க.எண் 081540/எம்2/இ2/2025 நாள். 06 .03.2026.

பொருள் : பள்ளிக் கல்வி – மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் அறிவிப்பு – பேராசிரியர் அன்பழகன் விருது – 2025–2026ஆம்கல்வி ஆண்டில் சிறந்த பள்ளிகளுக்கான பேராசிரியர் பெயரில் விருதுகள் வழங்குதல் – தகுதியான பள்ளிகளை தெரிவு செய்து அனுப்பக்கோருதல் – தொடர்பாக.

பார்வை : 1) இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை அவர்களின் செய்தி வெளியீடு எண் 2156, நாள் 30.11.2022.

2) பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க. எண் 081540/எம்2/இ2/2023 நாள் 24.12.2025

3) அரசாணை (நிலை) எண் 45 , பள்ளிக் கல்வி (ப.க. 5(1))த் துறை நாள் 24.02.2026

.....

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 30.11.2022 நாளிட்ட அறிவிப்பின்படி "கற்றல்–கற்பித்தல், ஆசிரியர் திறன் மேம்பாடு, தலைமைத்துவம், மாணவர் வளர்ச்சி என பன்முக வளர்ச்சியினை வெளிப்படுத்தும் சிறந்த பள்ளிகளுக்கு பேராசிரியர் பெயரில் விருது வழங்கப்படும்" என அறிவிக்கப்பட்டுள்ளது. பார்வை(3)ல் காணும் அரசாணையில் 2025–2026 ஆம் கல்வி ஆண்டில் சிறந்த பள்ளிக்கான பேராசிரியர் அன்பழகன் விருதிற்கு தகுதியான பள்ளியினை தெரிவு செய்து விருது வழங்குதல் சார்ந்து பின்வரும் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசுப் பொதுத் தேர்வுகள் / திறனறித் தேர்வுகளில் பள்ளி மாணவர்களின் பங்களிப்பு, அன்றாட கற்றல்–கற்பித்தல் நிகழ்வுகள், வகுப்பறை கற்பித்தலில் தொழில்நுட்ப பயன்பாடு, கல்வி இணை செயல்பாடுகள் மற்றும் கல்விசாரா செயல்பாடுகள் மாணவர்களின் ஒட்டுமொத்த ஆளுமை வளர்ச்சிக்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் உயர்கல்வியில் சேரும் மாணவர்கள் எண்ணிக்கை, விளையாட்டுப் போட்டிகள், கலைத்திருவிழா, மன்ற செயல்பாடுகளில் மாணவர்களின் பங்களிப்பு ஆகியனவற்றின் அடிப்படையிலும், பள்ளி வகுப்பறைகள் மாணவர்களின் கற்றலுக்கு ஏற்ற வகையில் இருக்கை வசதி மற்றும் தேவையான மின் மற்றும் மின்னணு சாதனங்களுடன் கூடிய ஆய்வகங்கள், வகுப்பறைகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள், விளையாட்டு மைதானம் மற்றும் அவற்றின் பயன்பாடு போதுமான எண்ணிக்கையிலான கழிப்பறைகள் மற்றும் அவற்றின் முறையான பராமரிப்பு, பள்ளிவளாக தூய்மை, மாணவர்கள் உணவருந்த சுத்தமான குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளமை,

பள்ளியின் பசுமைச் சூழல், பள்ளி காய்கறித் தோட்டம் மற்றும் அதன் பயன்பாடு நூலக பயன்பாடு ஆய்வக பயன்பாடு ஆகியவற்றையும் மதிப்பிட்டு விருதுக்குரிய பள்ளியை தெரிவு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விருதுக்கான குழு அமைத்தல்

சிறந்த பள்ளிகளுக்கான பேராசிரியர் அன்பழகன் விருதுக்கான பரிந்துரைகளை வழங்கிட ஏதுவாக மாவட்ட / மாநில அளவில் பின்வரும் தேர்வு குழுவினை கீழ்கண்டவாறு அமைத்திட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத் தேர்வுக் குழு

வ. எண்	பதவி	குழுவில் பதவி
1	முதன்மைக் கல்வி அலுவலர்	தலைவர்
2	முதல்வர் மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம்	உறுப்பினர்
3	தலைமையிடத்து மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி)	உறுப்பினர்–செயலர்
4	தலைமையிடத்து மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை)	உறுப்பினர்
5	மூத்த வட்டாரக் கல்வி அலுவலர்	உறுப்பினர்

மாநில தேர்வுக் குழு

வ. எண்	பதவி	குழுவில் பதவி
1	பள்ளிக் கல்வி இயக்குநர்	தலைவர்
2	தொடக்கக் கல்வி இயக்குநர்	உறுப்பினர்
3	இயக்குநர், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்	உறுப்பினர்
4	தொடக்கக் கல்வி இணை இயக்குநர், (நிர்வாகம்),	உறுப்பினர்
5	பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (நாட்டு நலப்பணித் திட்டம்)	உறுப்பினர்–செயலர்

மேலும் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாவட்டத் தேர்வு குழு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அளவீட்டின் முறையின் அடிப்படையில் விருதுக்கு தகுதியான பள்ளிகளை 1:2 என்ற விகிதத்தில் தெரிவு செய்து மாநில மாவட்ட தேர்வு குழுவிற்கு பரிந்துரைக்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநில தேர்வு குழு மற்றும் மாவட்ட தேர்வுக் குழுவின் பரிந்துரை பள்ளிகளின் ஒட்டுமொத்த செயல்பாட்டின் அடிப்படையில் பேராசிரியர் அன்பழகன்

விருதுக்குரிய பள்ளிகளை மாவட்ட வாரியாக தெரிவு செய்யவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட தேர்வுக்குழு அரசு தொடக்க அல்லது நடுநிலைப் பள்ளிகளில் ஏதேனும் இரண்டு மற்றும் அரசு உயர்நிலை அல்லது மேல்நிலை பள்ளிகளில் ஏதேனும் இரண்டு என மொத்தம் ஒரு மாவட்டத்திற்கு தகுதியான 4 பள்ளிகளை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு படிவத்தின் விவரப்படி தேர்வு செய்து கருத்துருக்களை 13 .03.2026 க்குள் அனுப்பிட அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு :
1) பார்வை(3)ல் காணும் அரசாணையின் நகல்
2) அடைவுத்திறன் மதிப்பீட்டு படிவம்

இயக்குநர்.

06/03/26

பெறுநர்
1) அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
2) அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி)

நகல்
1)இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை 6.
2) அரசு செயலாளர், பள்ளி கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை 9.

சிறந்த பள்ளிகளுக்கான பேராசிரியர் அன்பழகன் விருது – 2025–2026
(ஊராட்சி ஒன்றிய துவக்க / நடுநிலைப் பள்ளிகள்)

:

பள்ளியின் பெயர்
கல்வி மாவட்டத்தின் பெயர் :
வருவாய் மாவட்டத்தின் பெயர் :

வ. எண்	அடைவுத் திறன் மதிப்பீடு	மதிப்பெண்	வழங்கப் பட்டது
1	எண்ணும் எழுத்தும் திட்டம் செயல்படுத்துதல் (தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகள்)	10 மதிப்பெண்கள்	
2	மாணவர்களின் அடைவுத்திறன்	10 மதிப்பெண்கள்	
3	NMMS தேர்வுகளில் மாணவர்களின் சிறப்பான பங்களிப்பு	10 மதிப்பெண்கள்	
4	மூன்று ஆண்டுகளில் மாணவர் சேர்க்கை அதிகரிப்பு	5 மதிப்பெண்கள்	
அ)	50% க்கு மேல் – 5 மதிப்பெண்கள்		
ஆ)	30–50% – 4 மதிப்பெண்கள்		
இ)	20–30% – 3 மதிப்பெண்கள்		
ஈ)	10–20% –2 மதிப்பெண்கள்		
உ)	10% க்கு கீழ் – 1 மதிப்பெண்		
5.	பள்ளி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் (உள்ளூர் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு நிதி, பள்ளி மேலாண்மைக் குழு பங்களிப்புடன் பள்ளி உட்கட்டமைப்பை மேம்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்)	10 மதிப்பெண்கள்	
6.	மாணவர்கள் இடைநிற்றல் விகிதம் (மூன்று ஆண்டுகளின் சராசரி)	5 மதிப்பெண்கள்	
அ)	0% – 5% மதிப்பெண்கள்		
ஆ)	0.1–1% – 4% மதிப்பெண்கள்		
இ)	1.1–2% – 3% மதிப்பெண்கள்		
ஈ)	2% க்கு மேல் 0 மதிப்பெண்கள்		
7.	சாரண சாரணியர் இயக்கம், இளஞ்சிறார் செஞ்சிலுவைச் சங்கம், போன்றவற்றில் பள்ளி மாணவர்கள் பங்கேற்பு (பள்ளியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அமைப்புகள், அவற்றின் செயல்பாடு, மாணவர்கள் பெற்றுள்ள சிறப்பிடம் ஆகியனவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்தல்	10 மதிப்பெண்கள்	
8.	இலக்கிய மன்றம், வினாடி வினா மன்றம், சிறார் திரைப்படம், வானவில் மன்றம், நுகர்வோர் மன்றம் உள்ளிட்ட அனைத்து வகை மன்றங்களின் செயல்பாடுகள்	10 மதிப்பெண்கள்	
9.	பள்ளி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் அதன் செயலாக்கம்	10 மதிப்பெண்கள்	

10.	பள்ளி காய்கறித் தோட்டம் மற்றும் அதன் பயன்பாடு, பள்ளியின் பசுமை பரப்பை அதிகரிக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள், சுற்றுச் சூழல் மன்ற செயல்பாடுகள்	10 மதிப்பெண்கள்	
11.	பள்ளி நூலகப் பயன்பாடு (நூலக அமைப்பு, மாணவர்களுக்கு நூல்கள் வழங்கப்படுதல், அன்றாட நூலக பயன்பாடு, மாணவர்கள் நூலக பயன்பாடு சார்ந்த செயல்பாடுகள் ஆகியனவற்றை ஒருங்கே மதிப்பீடு செய்து மதிப்பெண் வழங்க வேண்டும்.	10 மதிப்பெண்கள்	
12.	பள்ளி ஆய்வக பயன்பாடு கற்றல் – கற்பித்தல் நிகழ்வில் ஆய்வக உபகரணங்களின் பயன்பாடு, பள்ளி ஆய்வகம் மூலம் மாணவர்கள் மேற்கொண்ட ஆய்வுகள் / செயல்திட்டங்கள் அறிவியல் புத்தாக்க விருது போன்றவற்றில் பள்ளி மாணவர்கள் பங்கேற்பில் ஆய்வக பயன்பாடு ஆகியவற்றை ஒருங்கே மதிப்பீடு செய்தல்	10 மதிப்பெண்கள்	
13.	பள்ளியில் பணியாற்றும் அனைத்து ஆசிரியர்கள் கற்பித்தல் செயல்பாடுகள் – பள்ளிப் பார்வை செயலியில் இடம் பெற்றுள்ள கற்பித்தல் உற்றுநோக்கல், வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 10 மதிப்பெண்கள் அடிப்படையில் மதிப்பீடு செய்து அனைத்து ஆசிரியர்களுக்குமான ஒட்டு மொத்த மதிப்பீட்டினை 50 மதிப்பெண்களுக்கு மாற்றிக்கொள்ளவும்.	50 மதிப்பெண்கள்	
14.	கடந்த மூன்று ஆண்டுகள் பள்ளி ஆசிரியர்கள் மேற்கொண்ட பயிற்சிகளின் மூலம் மேம்பட்ட வகுப்பறை சூழல் மற்றும் பயன்பாடு	10 மதிப்பெண்கள்	
15.	கலைத் திருவிழா உள்ளிட்ட தனித்திறன் போட்டிகளில் பள்ளி மாணவர்கள் வட்டார, மாவட்ட, மாநில அளவிலான பங்கேற்பு மற்றும் வெற்றிகள்	10 மதிப்பெண்கள்	
16.	பள்ளி அலுவலக மேலாண்மை (EMIS தரவுகள், மின்னணு பதிவேடுகள் பராமரிப்பு, மாணவர்கள் நலன் சார்ந்த இணைய வழி சேவைகள் – PSTM சான்றிதழ் வழங்குதல் போன்றவை) மற்றும் நான் முதல்வன் திட்ட செயல்பாடுகள்	5 மதிப்பெண்கள்	
17.	பள்ளி வளாகத் தூய்மை, போதுமான எண்ணிக்கையில் கழிவறை வசதிகள், கழிவு, மேலாண்மை. சுகாதாரமான குடிநீர் வசதி பள்ளி சிறார் சுகாதார திட்டம் செயல்படுத்துதல்	10 மதிப்பெண்கள்	
	மொத்தம்		

இணைப்பு: சான்று ஆவணங்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர்,

சிறந்த பள்ளிகளுக்கான பேராசிரியர் அன்பழகன் விருது – 2025–2026
(அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகள்)

பள்ளியின் பெயர் :
கல்வி மாவட்டத்தின் பெயர் :
வருவாய் மாவட்டத்தின் பெயர் :

வ. எண்	அடைவுத் திறன் மதிப்பீடு	மதிப்பெண்	வழங்கப் பட்டது
1(a)	HSS/SSLC பொதுத் தேர்வுகளில் கடந்த மூன்று ஆண்டுகளில் சராசரி தேர்ச்சி விழுக்காடு (உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு)	10 மதிப்பெண்கள்	
அ)	100 – 10 மதிப்பெண்கள்		
ஆ)	95–99% – 8 மதிப்பெண்கள்		
இ)	90–94% – 6 மதிப்பெண்கள்		
ஈ)	85–89% – 4 மதிப்பெண்கள்		
உ)	85% க்கு கீழ் – 3 மதிப்பெண்		
2.	HSS/SSLC பொதுத் தேர்வுகளில் கடந்த மூன்று ஆண்டுகளில் அனைத்து பாடங்களின் சராசரி மதிப்பெண் விழுக்காடு (உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு)	10 மதிப்பெண்கள்	
அ)	90% க்கு மேல் – 10 மதிப்பெண்கள்		
ஆ)	85–89% – 9 மதிப்பெண்கள்		
இ)	80–84% – 8 மதிப்பெண்கள்		
ஈ)	75–79% – 7 மதிப்பெண்கள்		
உ)	70–74% – 6 மதிப்பெண்கள்		
ஊ)	65–69% – 5 மதிப்பெண்கள்		
எ)	60–65% – 4 மதிப்பெண்கள்		
ஏ)	60% க்கு கீழ் – 3 மதிப்பெண்கள்		
3.	NTSC, NMMS போன்ற திறனறித் தேர்வுகள் மற்றும் NEET, JEE போன்ற உயர்கல்வி படிப்பிற்கான நுழைவுத் தேர்வுகளில் மாணவர்களின் சிறப்பான பங்களிப்பு	5 மதிப்பெண்கள்	
4.	மூன்று ஆண்டுகளில் மாணவர் சேர்க்கை அதிகரிப்பு	10 மதிப்பெண்கள்	
அ)	50% க்கு மேல் – 5 மதிப்பெண்கள்		
ஆ)	30–50% – 4 மதிப்பெண்கள்		
இ)	20–30% – 3 மதிப்பெண்கள்		
ஈ)	10–20% – 2 மதிப்பெண்கள்		
உ)	10% க்கு கீழ் – 1 மதிப்பெண்		
5,	பள்ளி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்	10	

	(உள்ளூர் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு நிதி, பள்ளி மேலாண்மைக் குழு பங்களிப்புடன் பள்ளி உட்கட்டமைப்பை மேம்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்)	மதிப்பெண்கள்	
6.	மாணவர்கள் இடைநிற்றல் விதிதம் (மூன்று ஆண்டுகளின் சராசரி)	10 மதிப்பெண்கள்	
அ)	0% – 5 மதிப்பெண்கள்		
ஆ)	0.1–1% – 4 மதிப்பெண்கள்		
இ)	1.1–2% – 3 மதிப்பெண்கள்		
ஈ)	2% க்கு மேல் – 0 மதிப்பெண்		
7.	சாரண சாரணியர் இயக்கம், இளஞ்சிறார் செஞ்சிலுவைச் சங்கம், நாட்டு நலப்பணித் திட்டம், தேசிய மாணவர் படை போன்றவற்றில் பள்ளி மாணாக்கர்கள் பங்கேற்பு (பள்ளியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அமைப்புகள், அவற்றின் செயல்பாடு, மாணவர்கள் பெற்றுள்ள சிறப்பிடம் ஆகியனவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்தல்	10 மதிப்பெண்கள்	
8.	இலக்கிய மன்றம், வினாடிவினா மன்றம், சிறார் திரைப்படம், வானவில் மன்றம், நுகர்வோர் மன்றம் உள்ளிட்ட அனைத்து வகை மன்றங்களின் செயல்பாடுகள்	10 மதிப்பெண்கள்	
9.	பள்ளி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் அதன் செயலாக்கம்	10 மதிப்பெண்கள்	
10.	பள்ளி காய்கறித் தோட்டம் மற்றும் அதன் பயன்பாடு, பள்ளியின் பசுமை பரப்பை அதிகரிக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள், சுற்றுச் சூழல் மன்ற செயல்பாடுகள்	10 மதிப்பெண்கள்	
11.	பள்ளி நூலகப் பயன்பாடு (நூலக அமைப்பு, மாணவர்களுக்கு நூல்கள் வழங்கப்படுதல், அன்றாட நூலக பயன்பாடு, மாணவர்கள் நூலக பயன்பாடு சார்ந்த செயல்பாடுகள் ஆகியனவற்றை ஒருங்கே மதிப்பீடு செய்து மதிப்பெண் வழங்க வேண்டும்.	10 மதிப்பெண்கள்	
12.	பள்ளி ஆய்வக பயன்பாடு கற்றல் – கற்பித்தல் நிகழ்வில் ஆய்வக உபகரணங்களின் பயன்பாடு, பள்ளி ஆய்வகம் மூலம் மாணவர்கள் மேற்கொண்ட ஆய்வுகள் / செயல்திட்டங்கள் அறிவியல் புத்தாக்க விருது போன்றவற்றில் பள்ளி மாணவர்கள் பங்கேற்பில் ஆய்வக பயன்பாடு ஆகியவற்றை ஒருங்கே மதிப்பீடு செய்தல்	10 மதிப்பெண்கள்	
13.	பள்ளியில் பணியாற்றும் அனைத்து ஆசிரியர்கள் கற்பித்தல் செயல்பாடுகள் – பள்ளிப் பார்வை செயலியில் இடம் பெற்றுள்ள கற்பித்தல் உற்றுநோக்கல், வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 10	50 மதிப்பெண்கள்	

	மதிப்பெண்கள் அடிப்படையில் மதிப்பீடு செய்து அனைத்து ஆசிரியர்களுக்குமான ஒட்டு மொத்த மதிப்பீட்டினை 50 மதிப்பெண்களுக்கு மாற்றிக்கொள்ளவும்,		
14.	கடந்த மூன்று ஆண்டுகள் பள்ளி ஆசிரியர்கள் மேற்கொண்ட பயிற்சிகளின் மூலம் மேம்பட்ட வகுப்பறை சூழல் மற்றும் பயன்பாடு	10 மதிப்பெண்கள்	
15.	BDG, RDS போன்ற விளையாட்டுப் போட்டிகளில் குறுவட்ட, மாவட்ட, மாநில அளவில் மாணவர்கள் பங்கேற்பு மற்றும் சிறப்பிடம் பெறுதல், தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு மாணவர்கள் பங்கேற்பு	10 மதிப்பெண்கள்	
16.	கலைத் திருவிழா உள்ளிட்ட தனித்திறன் போட்டிகளில் பள்ளி மாணவர்கள் வட்டார, மாவட்ட, மாநில அளவிலான பங்கேற்பு மற்றும் வெற்றிகள்	10 மதிப்பெண்கள்	
17.	பள்ளி அலுவலக மேலாண்மை (EMIS தரவுகள், மின்னணு பதிவேடுகள் பராமரிப்பு, மாணவர்கள் நலன் சார்ந்த இணையவழி சேவைகள் – PSTM சான்றிதழ் வழங்குதல் போன்றவை) மற்றும் நான் முதல்வன் திட்ட செயல்பாடுகள்	5 மதிப்பெண்கள்	
18.	பள்ளி வளாகத் தூய்மை, போதுமான எண்ணிக்கையில் கழிவறை வசதிகள், கழிவு மேலாண்மை, சுகாதாரமான குடிநீர் வசதி பள்ளி சிறார் சுகாதார திட்டம் செயல்படுத்துதல்	10 மதிப்பெண்கள்	
	மொத்தம்		

இணைப்பு : சான்று ஆவணங்கள்

முதன்மைக் கல்வி அலுவலர்,